**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்**

வழக்கு எண் OS. No. 181/2021 நாள்: 03.11.2025

**7 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வா.சா –1 கோகிலபாண்டியன் முன்னிலையானார். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**7 ஆம் பிரதிவாதி தரப்பில் வா.சா 1 ஐ மீண்டும் இன்று அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, 7 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் ஆசிரியர் பணியில் 22.01.2001 ஆம் தேதி சேர்ந்தேன். நான் நடுநிலைப்பள்ளியில் கணித பட்டாதாரி ஆசிரியராக சேர்ந்தேன் என்றால் முதலில் இடைநிலைப்பள்ளி ஆசிரியராக பணியில் சேர்ந்து 18.09.2012 ஆம் தேதி கணித பட்டாதாரி ஆசிரியராக பதவி உயர்வு பெற்றேன். முதலில் இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ் மங்கலம் ஒன்றியம், செவ்வாய் பேட்டை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் இடைநிலை பேராசிரியராக பணியில் சேர்ந்தேன். 2007 ஆம் வருடத்திலிருந்து தேனி மாவட்டம், மயிலாடும் பாறை ஒன்றியம், வேலாயுதபுரம், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் இடைநிலை பள்ளி ஆசிரியராக இருந்து அதன் பிறகு நரியூத்து ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 18.09.2012 ல் பட்டாதாரி ஆசிரியராக பதவி உயர்வு பெற்றேன். 2007 ஆம் வருடத்திலிருந்து தற்போது வரை ஆண்டிப்பட்டி தாலுகாவில் தான் பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் கணித பட்டாதாரி ஆசிரியராக பணியாற்றியதில் 6, 7, 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஆசிரியராக பணியாற்றி வருகிறேன் என்றால் சரிதான். நான் தற்போது பணியாற்றி வரும் T. ராஜகோபாலபட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில்

6 ஆம் வகுப்பில் 12 மாணவர்களும், 7, 8 ஆம் வகுப்புகளில் 10 மாணவர்களும் பயின்று வருகிறார்கள். என்னிடம் பயிலுகின்ற ஒவ்வொரு மாணவர்களின் படிப்புகளில் தனி கவனம் செலுத்த வேண்டியது என்னுடைய தலையாய கடமை என்றால் சரிதான்.

2) என்னுடைய பணி காலத்தில் என்னிடம் பயின்ற மாணவர்களில் எத்தனை மாணவர்களை கணித பாடத்தில் மிகச்சிறப்பாக படிக்க வைத்தேன் என்றால் என்னிடம் படித்த நுண்ணறிவு திறன் குறைந்த ஒரு சில மாணவர்களை தவிர மற்ற அனைத்து மாணவர்களையும் கணித பாடத்தில் மிகச்சிறப்பாக உருவாக்கியுள்ளேன். கணித பாடத்தில் மிகச்சிறப்பாக உருவாக்கியுள்ள மாணவர்களில் என்னிடம் படித்த மாணவர் சமுதாயத்தில் படித்து மிகச்சிறந்த உயர்நிலை அடைந்த மாணவர்கள் எத்தனை பேர் என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் அது சார்ந்த விவரம் எனக்கு தெரியாது. தற்போது கல்வி ஆண்டில் அரையாண்டு பருவம் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான்.அரையாண்டு பருவத்தில் நான் எத்தனை நாட்கள் விடுப்பு எடுத்துள்ளேன் என்றால் நான் கணக்கீடு செய்யவில்லை. நான் என்னுடைய பணி காலத்தில் அதிகமான நாட்கள் பள்ளிக்கு செல்லாமல் வழக்குகளையே தேடி சென்று அலைவதையே வாடிக்கையாக வைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஏனென்றால் அதிகாரவர்க்கத்தின் பழிவாங்கும் செயலால் இந்திய அரசியல் அமைப்பு சாசனத்தின் பிரிவு 21ன் படி எனக்கு வழங்கப்பட்ட வாழ்க்கை சுதந்திரத்தை உருக்குலைப்பதில் இருந்து என்னையும் எனது குடும்பத்தினரையும் பாதுகாத்து கொள்வதற்காக

வேறுவழியின்றி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து விடுப்பு எடுத்து நீதிமன்றத்திற்கு வர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

3) நன்கு சிறப்பாக மாணவர்களின் மீது அக்கறை செலுத்தி நன்கு கல்வி வழங்கும் ஆசிரியர்களுக்கு தமிழக அரசு மற்றும் மத்திய அரசினால் நல்லாசிரியர் விருது வழங்கப்படும் என்று சொன்னால் சரியல்ல. அரசியல செல்வாக்கின் பரிந்துரையின் அடிப்படையில் தான் நல்லாசிரியர் விருது வழங்கப்படுகிறது. 2001 ஆம் வருடத்திலிருந்து இன்று வரை 24 ஆண்டுகளில் என்னுடைய பெயர் நல்லாசிரியர் விருதிற்கு எந்த வருடமாவது பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா என்றால் நல்லாசிரியர் விருதிற்கான கருத்துருகோப்பை நான் அனுப்பவில்லை. அதனால் நான் பரிந்துரை செய்யப்படவில்லை. நான் மாணவர்களின் நலனில் சிறுதும் அக்கறை இன்றி செயல் படும் விவரம் எனக்கு நன்றாக தெரிந்ததால் தான் நான் நல்லாசிரியர் விருதிற்கு பரிந்துரைக்க கருத்துருகோப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய ஆசிரியர் பணியில் என்னுடைய உயர் அதிகாரியிடமோ சக ஆசிரியர்களிடமோ மாணவர்களிடமோ நற்பெயர் பெறவில்லை என்றால் சரியல்ல. அதை நிருபிக்க வேண்டிய கடமை எதிர்வாதிகளை சார்ந்தது.

4) வழக்கின் 7 ஆம் பிரதிவாதி மயிலாடும் பாறை ஒன்றியத்தில் உதவி தொடக்க கல்வி அலுவலராக 2012 ஆம் வருடம் முதல் 2015 ஆம் வருடம் வரை பணிபுரிந்தார். 7 ஆம் பிரதிவாதி இவ்வழக்கின் 1, 2 பிரதிவாதிகளின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு அபராதமோ விதித்தாரா என்றால்

ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவில்லை.அபராதம் விதிக்கவில்லை. மாற்றுப்பணி உத்தரவு வழங்கினார். ஒழுங்கு நடவடிக்கை விதிகளில் மாற்றுப்பணி உட்பட்டது அல்ல. என்னுடைய பிராதில் பக்கம் 3ல் 7ஆம் பிரதிவாதி மேற்படி 1ஆம் பிரதிவாதியிடம் 19.12.2014 ஆம் தேதியன்று மேற்படி பள்ளியில் விசாரணை செய்து 1ஆம் பிரதிவாதியிடம் மன்னிப்பு கடிதம் மட்டும் பெற்றுக்கொண்டு மேல்நடவடிக்கை எதுவும் எடுக்காமல் விட்டு விட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதே போன்று இந்த வழக்குரையில் பக்கம் 3ல் ந.க.எண்.90/அ/1/2015 நாள்.04.03.2015 ஆம் தேதிய கடிதத்தின் மூலம் 1ஆம் பிரதிவாதியை எச்சரிக்கை செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

5) 7ஆம் பிரதிவாதி உதவி தொடக்கக்கல்வி அலுவலர் என்ற நிலையில் என் மீது குற்றச்சாட்டு கூறவோ என் மீது ஒழுங்கு நடவடிக்கை மீதான உத்தரவு பிறப்பிக்கவோ தண்டனை விதிக்கவோ அதிகாரம் உள்ளதா என்றால் குறிப்பாணை கொடுப்பதற்கு மட்டும் அதிகாரம் உண்டு. விசாரணையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க மாவட்ட கல்வி அலுவலருக்கு பரிந்துரை செய்ய அதிகாரம் உண்டு. 7ஆம் பிரதிவாதி என் மீது ஏதாவது குற்றச்சாட்டின் மீது விசாரணை செய்தோ அல்லது என் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவோ பரிந்துரை ஏதேனும் செய்துள்ளாரா என்றால் இல்லை. தேனி மாவட்டத்தில் தொடக்கக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் மீதான பாலியல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய ஒரு மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலரால் ஒரு விசாரணை குழு அமைக்கப்பட்டுள்ளது என்றால் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில்

மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலரால் ஒரு விசாரணை குழு அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அமைக்கப்பட்ட விசாரணை குழு வா.சா.ஆ.27 என்றால் சரிதான். விசாரணை குழு உறுப்பினர்கள் ஐவரில் 7 ஆம் பிரதிவாதியும் ஒருவர் என்றால் சரிதான். என் மீது மொத்தம் எத்தனை பாலியல் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன என்றால் எனக்கு எதிராக 3 பாலியல் குற்றச்சாட்டுகள் பெறப்பட்டதாக 4 ஆம் பிரதிவாதியால் கூறப்பட்டதே தவிர தேனி DEEO அலுவலுக பதிவேடுகளில் அவ்வாறான புகார்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

6) என் மீது மயிலாடும் பாறை ஒன்றியம்,காமராஜபுரம் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஈஸ்வரி என்பவர் தேனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பாலியல் புகார் கொடுத்து குற்ற எண்.60/2022 ன் படி இந்திய தண்டனை சட்டம் பிரிவு 147, 148, 294 பி, 323, 324,506(II),354D மற்றும் TNPHW act பிரிவு 4 ன் படி வழக்குபதியப்பட்டு அதன் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு தேனி மகிளா நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CC. 270/2023 என்ற வழக்கு விசாரணையில் உள்ளதா என்றால் சரிதான். மேற்படி வழக்கானது காமராஜபுரம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் புத்தக வங்கிக்காக சேகரித்து வைக்கப்பட்டிருந்த சுமார் 3000 எண்ணிக்கையிலான தமிழ்நாடு அரசின் இலவச பாடப்புத்தகங்களை கடந்த 12.11.2022 ஆம் தேதி சனிக்கிழமை அரசு விடுமுறையன்று எடைக்கு விற்றது தொடர்பாக மேற்படி தலைமை ஆசிரியர் suspend செய்யப்பட்டு மேற்படி குற்றத்திற்காக வருசநாடு காவல் நிலையத்தில் குற்ற வழக்கு பதிவுசெய்யப்பட்டு அவ்வழக்கானது ஆண்டிப்பட்டி நீதித்துறை நடுவர்நீதிமனற்த்தில் நடைபெற்று வருகிறது.

மேற்படி செயல்களால் ஆத்திரம் அடைந்த தலைமை ஆசிரியர் 1, 2 ஆம் பிரதிவாதிகளின் தூண்டுதலின் படி கடந்த 25.11.2022 ஆம் தேதியன்று பொய்யான புகாரை அளித்து வழக்கு பதிவு செய்து அவ்வழக்கின் புலனாய்வு அதிகாரி மேற்படி 1 மற்றும்2 ஆம் பிரதிவாதிகளுக்காகவே இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதற்கு ஆதாரமாக 25.12.2022 ஆம் தேதிய அனைத்து மகளிர் காவல் நிலைய சுமார் 3 மணி நேர CCTV காட்சியானது எனது தரப்பு சான்று ஆவணமாக மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மேற்படி வழக்கில் 354 பி, 354 டி, 506(1), இ.த.ச மற்றும் TNPHW sec 4 ஆகிய 4 பிரிவுகளில் மட்டும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எனது சாட்சியத்தில் பல தேதிகளையும் பல வழக்கு பிரிவுகளையும் சான்று ஆவணங்களையும் நினைவில் வைத்து தெளிவாக சொல்லும் போது இந்த அரையாண்டில் நான் எத்தனை நாட்கள் விடுமுறை எடுத்தேன் என்று தெரியாது என்று கூறுவதன் மூலமே என்னுடைய தீய செயல்பாடுகள் தெரியும் மற்றும் மாணவர்கள் நலனில் அக்கறை இன்மையையும் தெளிவு படுத்தும் என்று சொன்னால் சரியல்ல. என் மீது வா.சா.ஆ 41 ன்படி கூறப்பட்ட குற்றச்சாட்டு பாலியல் தொடர்பானது என்றால் சரிதான். ஆனால் 4 ஆம் பிரதிவாதியால் சொல்லப்பட்ட பொய்யான குற்றச்சாட்டு ஆகும்.

8) வா.சா.ஆ. 41 ன் படி புகாருக்கு உட்பட்டவர்களாக நானும் மற்றொரு ராமராஜபாண்டியன் என்ற மற்றொரு ஆசிரியரும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது 4 ஆம் பிரதிவாதியால் தன்னிட்சையாக

சொல்லப்பட்டது. ராமராஜபாண்டியன் மீதான குற்றச்சாட்டு மேலப்பட்டி ஊர் பொதுமக்கள் அளித்த புகார் தொடர்பாக விசாரிக்கப்பட்டதாக வா.சா.ஆ. 41 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது 4 ஆம் பிரதிவாதியால் சொல்லப்பட்டுள்ளது. நான் சொல்லவில்லை. என் மீது புகார் கொடுத்தவராக 1, 2 பிரதிவாதிகளும் மற்றும் நந்தினி என்பவரும் காட்டப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். அது 4 ஆம் பிரதிவாதியால் தன்னிட்சையாக சொல்லப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைக்கு நான் ஆஜர் ஆனேன். 14.02.2017 ல் விசாரணை நடைபெற்றது. விசாரணை குழுவில் 7 ஆம் பிரதிவாதி ஆஜர் ஆகவில்லை என்றால் நியமனம் செய்யப்பட்டு உள் நோக்கத்துடன் ஆஜர் ஆகவில்லை. வழக்குரையில் கூறப்பட்டுள்ள சம்பவங்களின் அடிப்படையில் ஆண்டிப்பட்டி மாண்புமிகு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CC. No. 66/2022 என்ற வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான்.

9) அந்த வழக்கு நான் கொடுத்த தனிநபர் புகாரின் அடிப்படையில் ஏற்பட்ட வழக்கு என்றால் சரிதான். அவ்வழக்கில் என்னை 7 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலருக்கு 13.02.2017 ஆம் தேதியிட்டு ஓர் கடிதம் எழுதி அதில் தன்னை இவ்விசாரணையில் இருந்து விடுவிக்கும் படி எழுதியுள்ள கடிதம் என் மூலமாகவே அவ்வழக்கில் எதிர்தரப்பு சான்றுஆவணம் 1 ஆக குறியீடு செய்யப்பட்டதா என்றால் என்னை குறுக்கு விசாரணை செய்யும் போது என் மூலமாக குறியீடு செய்யப்பட்டது. 7 ஆம் பிரதிவாதி விசாரணையில் பங்குபெற வில்லை என்பது தொடர்பாக நான் மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலருக்கோ அல்லது வேறு உயர் அதிகாரிக்கோ கடிதம் எழுதி

அனுப்பினேனா என்றால் இல்லை. ஏனென்றால் 08.02.2017 ஆம் தேதிய விசாரணை குழு உறுப்பினர் பட்டியல் ஆவணமானது மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவின் படி கடந்த 2018 லேயே எனக்கு வழங்கப்பட்டது. விசாரணை குழுவின் அறிக்கை வா.சா.ஆ. 44 ஆக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

(7 ஆம் பிரதிவாதிதரப்பிலான குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது).

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

**(Sd/– C. Sankar)**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**